ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீலோககுரவே நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

<u>கூரகுலோத்தம தாஸ நாயன்-வருஷ திருநட்சத்திரம் - ஐப்பசி - திருவாதிரை</u>




பிள்ளைலோகாசாரியர் காலசேஷப கோஷ்டி - இதில் கூரகுலோத்தமதாஸர் அலங்கரிப்பதைக் காணலாம்

புகைப்பட உதவி - ஸ்ரீ கோமடம் ஸ்ரீநாத் ஸ்வாமி, காஞ்சீபுரம்

<u>தனியன்</u>

துலார்த்ராயாம் ஸமுத்பந்நம் வந்தே லோகார்ய ஸம்ஸ்ரீதம் /
ஸ்ரீசைலேஸகுரோர் ஜ்ஞாநப்ரதம் கூரகுலோத்தமம் //

## தியான ஸ்லோகம்

லோகாசார்ய க்ருபா பாத்ரம் கௌண்டிந்ய குலபூஷணம் /
ஸமஸ்தாத்ம குணாவாஸம் வந்தே கூரகுலோத்தமம் //

ஸ்வயமாஹூய சைலேஸ குரவேர்த்தப்ரதாநத: /
லப்தோதாராபிதம் கூரகுலோத்தமம் அஹம் பஜே //

## இந்த ஸ்லோகங்களின் அர்த்தம்

பிள்ளைலோகாசார்யருடைய கிருபைக்குக் கொள்கலமாய் கௌண்டிந்ய குலத்துக்கு அணியாய் எல்லா ஆத்ம குணங்களுக்கும் இருப்பிடமான கூரகுலோத்தம தாஸ நாயனை அடிபணிகிறேன். தானே வலிய அழைத்து திருமலையாழ்வாருக்கு விசேஷார்த்தங்களை பிரசாதித்த தனால் பெறப்பட்ட உதாரர் என்கிற பெயரையுடைய கூரகுலோத்தம தாஸ நாயனாரை வணங்குகிறேன்.

## வாழித்திருநாமம்

சந்ததமு மாழ்வார்கள் தமிழ் வளர்த்தோன் வாழியே
தாரணியில் சிறுநல்லூர் தானுடையோன் வாழியே
எந்தை யுலகாரியனை யிறைஞ்சுமவன் வாழியே
இலகு துலா வாதிரையி லிங்குதித்தான் வாழியே
இந்த வுலகத்தோர்க் கிதமுரைத்தோன் வாழியே
எழில்வசன பூடணத்துக் கினிமைசெய்தான் வாழியே
குந்திநகர்ச் சிந்தைகொண்ட செல்வனார் வாழியே
கூரகுலோத்தம தாசர் குரைகழல்கள் வாழியே.

ஆசாரியர் - பிள்ளைலோகாச்சார்யர்

சிஷ்யர் - திருவாய்மொழிப்பிள்ளை; திருவவதார ஸ்தலம் - கோயில்

பஞ்சஸம்ஸ்காரங்களும், நித்யானு ஸந்தானங்களும் ஸாதித்தருளின ஆசார்யர் - வடக்குத்திருவீதிப்பிள்ளை

திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களும், ஈடு முதலான வ்யாக்யானங்களும், ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களும், ஸ்ருதப்ரகாஸிகையும் ஸாதித்தருளின ஆசார்யர் - பிள்ளைலோகாசார்யர்.

தத்வத்ரயாதி ரஹஸ்யங்களும், ஸகலரஹஸ்யார்த்தங்களும் ஸாதித்தருளின ஆசார்யர் - அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்

பிள்ளைலோகாசார்யர் காலசேஷப கோஷ்டியில் அன்வயித்த முதலிகளில் இவரும் ஒருவர்.

## பிள்ளைலோகாச்சாரியரும்   கூரகுலோத்தமதாஸரும்

ஸ்ரீரங்கம் முகம்மதிய படையெடுப்புக்கு ஆட்பட்ட காலத்தில், இளைய பெருமாள் இராமனுக்கு பின் தொடர்ந்து அடிமை தொழில் செய்தது போல, பிள்ளைலோகாச்சார்யர் தம் அந்தரங்க சிஷ்யர்களுடன் அரங்க நகர்க்கு இறையாம் நம்பெருமாளையும், நாச்சிமார்களையும் ரகசியமாகக்காப்பாற்றிக் காட்டு வழியாக திருமாலிருஞ்சோலைக்கு அருகில் ஆனைமலைப்பக்கம் ஜோதிஷ்குடி என்ற கொடுக்குளம் ஊரில் எழுந்தருளச்செய்தார்.

**பிள்ளைலோகாச்சாருடன் சென்ற முக்கியமான ஸ்ரீவைஷ்ணவர்கள் கீழே வருமாறு:**

1)) கூரகுலோத்தம தாஸர் 2) திருக்கண்ணங்குடிப்பிள்ளை 3)திருப்புட்குழி ஜீயர் 4) விளாஞ்சோலைப்பிள்ளை 5) நாலூர்பிள்ளை 6) மணற்பாக்கத்து நம்பி 7) கொல்லிகாவல தாஸர் 8) கோட்டூர் அண்ணர் 9) திருவாய்மொழிப் பிள்ளையின் திருத்தாயார்-ஸாத்விக அம்மையார் 10) திருக்கோபுரத்து நாயனார் - முதலியாண்டான் வம்சத்தில் அவதரித்தவர் (திருவரங்கச் செல்வத்தைப் பன்மடங்கு பெருக்கி கோயிலை சிறப்பாக நிர்வாகித்து வந்தவர்) ஆகியோர்.

## திருமலையாழ்வாரின் திருத்தாயார் நம்பெருமாளுக்கு திருவாலவட்ட கைங்கர்யம் செய்தல்

கூரகுலோத்தம தாஸரைப்பற்றி கூறும் போது அவருடைய சிஷ்யர் திருவாய்மொழிப் பிள்ளையின் திருத்தாயாரைப்பற்றியும் கூறாமல் இருக்கமுடியாது. அந்தத்தாயார் நம்பெருமாள் மீது கொண்டு இருந்த ஈடுபாட்டை கீழே அனுபவிப்போம்.

ஜ்யோதிஷ்குடியில் செந்தாமரைக் குளமும் அதன் அருகில் வற்றாத சுனையும் இருந்தன. அக்குகையில் அழகியமணவாளனைப் பாதுகாப்பாக எழுந்தருளப் பண்ணினார்கள். அப்போது பிள்ளைலோகாசாரியரின் அருகில் இருந்த திருமலையாழ்வாரின் திருத்தாயாரிடம் நம்பெருமாளுக்கு வியர்க்கும். சற்று திருவாலவட்டத்தால் வீசு என்று நியமித்தார். நம்பெருமாளின் திருமுகத்தில் வியர்வைத்துளிகள் அரும்பியிருந்தன. அவளும் ஸ்வாமி திவ்யமயமான திருமேனியும் புழுங்குமா? என்று கேட்டாள். பிள்ளைலோகாசாரியரும் புழுங்கும் காண், எவ்வாறு எனில் வேர்த்து பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும் போது (நாச்சியார் திருமொழி 12ஆம் திருமொழி 6ஆம் பாசுரம்) என்கிற ஆண்டாள் பாசுரத்தை மேற்கோள் காட்டி அவளுடைய ஈடுபாட்டிற்கு தகுதியாக வார்த்தை அருளிச்செய்தார். அவள் திருவாலவட்ட கைங்கர்யம் செய்ததும் வியர்வை அடங்கியது.

## பிள்ளைலோகாசார்யர் திருமலையாழ்வாரை தமக்குப் பிறகு ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்திற்கு ப்ரவர்த்தகறாக நியமித்தல்

பிள்ளைலோகாசர்யார் தனக்கு அந்திம காலம் நெருங்குவதை உணர்ந்தார். இவருடைய சிஷ்யர்கள் தங்களுக்கு தஞ்சம் இனியார் என்று கேட்டு உள்ளம் கலங்கி சோர்ந்து நின்றனர். சிஷ்யர்களிடம் திருமலையாழ்வார் என்பவர் இப்பொழுது லௌகிக, வைதிகங்களில் அதிநிபுணராய் மதுரையில் ராஜாவாக அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறார். இவர் தமிழ் கல்வியும், உலகியல் கல்வியும் பயின்ற ராஜ புரொஹிதராகவம், ராஜ வல்லபராகவும் அமர்ந்து பிரகாசித்து வருகிறார். இவரை ராஜா காரியத்திலிருந்து விலக்கி ஸ்ரீவைஷ்ண தரிசனத்தின் ப்ரவத்தகராக்கும்படி செய்யும் பொருப்பை கூரகுலோத்தம தாஸாரிடம் ஒப்படைக்கிறேன் என்று சொன்னார். இதற்குக் காரணம் எதிர்காலத்தில் வைதிக, லௌகிக சாமர்த்தியம் படைத்த திருமலையாழ்வாரால் தான் நம் ஸம்பரதாயத்தை மீண்டும் பொலிவுறச் செய்ய இயலும் என்ற திடமான நம்பிக்கை பிள்ளைலோகாசார்யர் கொண்டிருந்தார்.

## தம் சிஷ்யர்களுக்கு பிள்ளைலோகாசாரியரின் அந்திம கால அறிவுரைகள்

1) திருவாய்மொழிப்பிள்ளையை திருத்திபணிகொண்டு ரஹஸ்யார்த்தங்களை நன்றாக ப்ரஸாதிக்கும்படி கூரகுலோத்தம தாஸரை நியமித்தார்.
2)திருக்கண்ணங்குடிப் பிள்ளையையும், திருப்புட்குழி ஜீயரையும் திருவாய்மொழியின் அர்த்த விசேஷங்களை திருவாய்மொழிபிள்ளைக்கு உபதேசிக்குமாறு கூறினார்.
3) மற்றுமுள்ள மூவாயிரம் பாசுரங்களின் வ்யாக்யானங்களை திருவாய்மொழிப் பிள்ளைக்கு நாலூர் பிள்ளையை உபதேசிக்கும்படி கூறினார்.
4) விளாஞ்சோலைப்பிள்ளையை ஸ்ரீவசணபூஷணத்தின் அர்த்த விசேஷங்களை திருவாய்மொழி பிள்ளைக்கு உபதேசிக்குமாறு நியமித்தருளினார்.

## நம்பெருமாள் பிள்ளைலோகாச்சாருக்கும் அவர் ஸம்பந்தம் உள்ளவர்களுக்கும் பெருவீடு அளித்தல் (கூரத்தாழ்வானுக்கு நம்பெருமாள் அனுக்கிரஹம் செய்தததுபோல்)

பிள்ளைலோகாச்சாரியர் நம்பெருமாளிடம் தமக்கு அந்திம காலம் வந்து விட்டது என்று தெருவித்தார். அப்போது நம்பெருமாள் சோதிவாய் திறந்து உமக்கும் உம்முடைய தொடர்பு பெற்றவர்களுக்கும் மோசஷம் தந்தோம் என்று அருளப்பாடு இட்டார். அந்த வினாடி தொடங்கி, பிள்ளைலோகாச்சார்யர் தம்முடைய எல்லையற்ற கருணையாலே எறும்பு மற்றும் தாவரங்களைத் தம் திருக்கரங்களால் தொட்டுக்கருணை உள்ளத்துடன் எல்லார்க்கும் தம்மோடு

கூடிய ஸம்பத்தத்தை உண்டாக்கினார். உடனே பத்மாஸனத்தில் தமது ஆசார்யரான வடக்குத்திருவீதிப் பிள்ளையின் திருவடிகளைத் தியானித்துக் கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார். இவர் சிஷ்யர்கள் இவருக்கு சரமகைங்கர்யங்கள் செய்தார்கள். இவருடைய திருவடிகளிலே ஆஸ்ரயித்த திருமலையாழ்வாரின் திருத்தாயாரான ஸாத்விக அம்மையார் இவருடைய பிரிவால் வருத்தமுற்று பரமபதத்துக்கு எழுந்தருளினார்.

<u>**கூரகுலோத்தம தாஸர் திருமலையாழ்வாரை (திருவாய்மொழிப் பிள்ளையை) திருத்திப் பணிகொண்டவிதம்**</u>

திருமலையாழ்வாரின் வைதிக, லௌகிக ஞானத்தை அறிந்த மதுரையில் ஆட்சி செய்த பாண்டிய மன்னன் அவரைத் தனது அமைச்சாராகவும் புரோஹிதராகவும் நியமித்தான் (பெரியாழ்வார் காலத்தில் ஆட்சி செய்த பாண்டிய மன்னன் செல்வ நம்பியை தம்முடைய புரோஹிதராக நியமித்தது போல்). பாண்டிய மன்னர்களிடையே ஏற்பட்ட தாயாதிச் சண்டையில் ஆட்சி அதிகாரத்தில் வலுவிழந்தனர். திருமலையாழ்வாரே செங்கோல் ஏற்று ராஜபிரதி நிதியாகப் பணியேற்று நிர்வாஹங்களை சிறத்தையுடன் பரிபாலித்து வந்தார்.

திருமலையாழ்வாரை ஆன்மீக பணியில் ஈடுபடுத்தி ஸ்ரீவைஷ்ணவ பீடத்தில் அமரச் செய்யும் பெரும் பொறுப்பைப் பிள்ளைலோகாசாரியர் தமது அந்திம காலத்தில் கூரகுலோத்தம தாஸரிடம் ஒப்படைத்திருந்தார். இவர் திருமலையாழ்வாரை சந்திக்கும் அவகாசத்தை எதிர் பார்த்திருந்தார். இவர் ஒருநாள் திருமலையாழ்வார் பல்லக்கில் ஏறி அமர்ந்து அரண்மனையை நோக்கிச் சென்றதைக் கண்டார். இவர் பல்லக்குச் செல்லும் வழியில் நின்று கொண்டு அவர் செவியில் கேட்குமாறு இனிய குரலில் ராகத்துடன்

பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்கும்அழுக்குடம்பும்
இந்நின்றநீர்மைஇனியாமுறாமை. உயிரளிப்பான்
எந்நின்றயோனியுமாய்பிறந்தாய்! இமையோர்தலைவா!
மெந்நின்றுகேட்டருளாய். அடியேன்செய்யும்விண்ணப்பமே.

என்கிற நம்மாழ்வாரின் முதல் ப்ரபந்தமான திருவிருத்தத்தின் முதல் பாசுரத்தை அநுசந்தானம் செய்தார். (காஞ்சீபுரத்தில் எம்பெருமானார் தேவப்பெருமாளுக்கு திருமஞ்சன தீர்த்தம் கொண்டு வரும் பொழுது, பெரிய நம்பிகள் வழியில் நின்று கொண்டு ஸ்ரீஆளவந்தார் அருளிய ஸ்தோத்ர ரத்ன ஸ்லோகங்களை வாய்விட்டு அனுஸந்தானம் செய்ததை இங்கு நினைத்து பார்க்க தோன்றுகிறது). பல்லக்கில் உள்ளேயே அமர்ந்து கொண்டு திருமலையாழ்வார் இவரை அழைத்து இந்த பாசுரத்திற்குப் பொருள் கூறுமாறு நியமித்தார். அவருக்குப் பணிவு இல்லாதது கண்டு வெறுப்புற்றார். வெறுப்பை வெளிப்படுத்தும் வகையில் உமக்கு அர்த்தம் சொல்ல ஒண்ணாது என்று

சொல்லி கீழே உமிழ்ந்தார். நம்மாழ்வார் மெய்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே என்று வேண்டியருளினார். ஆனால் திருமலையாழ்வாரோ பல்லக்கில் அமர்ந்து, ஊர்ந்து கொண்டு சிறிதும் பணிவு இல்லாமல் பொருள் கேட்டதால் இவருக்கு மிகுந்த சினமும், தாபமும் ஏற்பட்டது. இவர் திருமலையாழ்வாருக்கு பணிவு ஏற்பட்டவுடன் ரகசிய அர்த்தங்களை உபதேசிக்கலாம் என்று தீர்மானித்து ஸ்ரீரங்கத்திற்கு சென்றுவிட்டார். (எங்களாழ்வான் நடாதூரம்மாளை நான் செத்த பிறகு வா என்று கூறி திருப்பி அனுப்பி விட்ட நிகழ்ச்சி இங்கே நினைக்க தோன்றும். அதாவது நான் என்னும் அஹங்காரம் உடலை விட்டு ஒழிந்த பிறகு வா என்று அர்த்தம். அடியேன் என்று சொல்லி ஸ்வரூபதற்குப் பொருத்தாமாக அர்த்த விசேஷங்களை ப்ரஸாதிக்குமாறு ஆசார்யனிடம் ப்ரார்த்திக்க வேண்டும்).

## திருமலையாழ்வார் கூரகுலோத்தம தாஸரிடம் அபசாரப்பட்டதற்கு மனம் வருந்துதல்

கூரகுலோத்தம தாஸர் கோபித்து அவ்வாறு உமிழ்ந்ததால் திருமலையாழ்வாருக்குச் சினம் சிறிதும் ஏற்படவில்லை. ஏனேனில் தம்முடைய சிறு வயதில் திருவரங்கம் சென்று தம் தாயாருடன் பிள்ளைலோகாசார்யரை பணிந்தபோது அவருடைய விசேஷ கடாக்ஷம் பெற்றிருந்தார். தம்முடைய படையாட்கள் இவரை சூழ்ந்தபோதும் அவர்களை விளக்கினார். திருமலையாழ்வார்க்கு கூரகுலோத்தம தாஸாரிடம் அபசாரப்பட்ட நிகழ்ச்சி ஆழ் மனத்தில் நன்றாக பதிந்து விட்டது. அவர் அநுசந்தானம் செய்த பொய்ந்நின்றஞானமும் என்கிற திருவிருத்திப்பாசுரம் மனத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அதனால் திருமலையாழ்வார் குந்திநகர் சென்று தன் சிறிய தாயாரிடம் நிகழ்ந்ததைத் தெரிவித்தார். அவளும் பிள்ளைலோகாசாரியரின் திருவடிகளில் உண்டான ஸம்பந்தத்தை நினைவு படுத்தினாள். அதனால் மனம் மிகவும் கலங்கினார். கூரகுலோத்தம தாஸாரிடம் அபசாரப்பட்டதால், அவரை ஆச்ரயிக்க மனம் தூண்டியது.

## கூரகுலோத்தம தாஸர் திருமலையாழ்வார்க்கு ரகஸ்யார்த்தங்களை உபதேசித்தல்

திருவரங்கம் திரும்பிய கூரகுலோத்தம தாஸர் திருமலையாழ்வாரை நேரில் கண்டு அவரைத் திருத்திப் பணிகொள்ளும் சந்தர்பத்தை எதிர்பார்த்து ஆவலுடன் இருந்தார் (லோகாசாரியரின் ஆனையை நிறைவேற்றுவதர்க்காக).

அழகிய மணவாளனுக்கு நிவந்தமாய் விடப்பட்ட நிலங்களை மேற்பார்வை இட்டு வருபவர்களில் ஒருவரான சிங்கப்பிரான் (திருமணத்தூண் நம்பி என்று இவரை அழைப்பார்கள்) என்னும் ஸ்ரீவைஷ்ணவர், இவரிடம் வந்து

திருமலையாழ்வாரின் பெருமையைச்சொல்லி நீர் மதுரை சென்று இவரைத் திருத்திப்பணி கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார். அவருடைய பிரார்த்தனையை சிரமேற்கொண்டு கூரகுலோத்தம தாஸர் மதுரை சென்று தக்க சமயத்தை எதிர் பார்த்திருந்தார்.

ஒருநாள் ஒரு விசேஷ தினத்தில் திருமலையாழ்வார் பட்டத்து யானை மேல் ஏறிப் புறப்பட்டு வரும் போது கூரகுலோத்தம தாஸரும் யானை உயரத்துக்கு சரியாக ஒரு மேட்டு நிலத்தில் ஏறித் தம்மை காணும்படியாக நின்று கொண்டார். இதைக் கண்ணுற்ற திருமலையாழ்வார் யானையிலிருந்து உடனே கீழே இறங்கி கூரகுலோத்தம தாஸரின் திருவடிகளில் தீர்க்கமாக தண்டனிட்டுக் கிடந்தார். கூரகுலோத்தம தாஸரும் அவரைத் திருக்கைகளால் எடுத்து அனைத்துக் கொண்டார்.

திருமலையாழ்வார் அவரைத் தன் திருமாளிகைக்கு எழுந்தருளப்பண்ணி உபசாரங்கள் செய்தார். அவரும் பிள்ளைலோகாசாரியர் சரமதிசையில் தமக்கு இட்ட ஆஜ்ஞையை விஸ்தாரமாக உரைத்தார். அது கேட்டு திருமலையாழ்வார் மிகவும் உகப்படைந்து தேவரீர் அடியேனைக் கிருபைபண்ணி இங்கே எழுந்தருளியிருந்து விடியர்காலைநேரம் அடியேன் திருமண்காப்பு அணிந்து கொள்ளும் சமயத்தில் எழுந்தருள வேணும் என்று பணிவுடன் பிரார்த்திதார். அவர் தங்குவதற்கு வைகையாற்றின் கரையில் ஸந்த்யா மடத்தருகே ஒரு திருவீதியையும் அதிலே அவர்க்கு ஒரு திருமாளிகையும் உண்டாக்கினார். அவருடைய நித்தியபடி திருவாராதனம், ததீயாராதனைகளுக்கு ஏற்பாடு செய்தார்.

கூரகுலோத்தம தாஸர் அரண்மனை வளாகத்திலிருந்த திருமலையாழ்வார் திருமாளிகைக்குச் சென்று அவர் திருமண்காப்பு இட்டுக் கொள்ளும் போது

லோகாசார்யாய குரவே க்ருஷ்ண பாதஸ்ய ஸூநவே /
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம: //

என்ற பிள்ளைலோகாசாரியரின் தனியனை அநுஸந்திக்கக்கேட்டு மிகவும் திருவுள்ளம் பூரித்து அன்று தொடங்கி தினமும் அவ்வாறு சென்று கிடைத்த சில அவகாசங்களில் ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்து வந்தார். திருமலையாழ்வார் இவரிடம் ஸகல ஸம்பிராதாய அர்த்தங்களையும் கேட்டு உள்ளத்தில் தேக்கிக் கொண்டார்.

ஒருநாள் ராஜகாரிய நிர்பந்தத்தால் அவகாசமில்லை என்று சொல்லி கூரகுலோத்தம தாஸர் அருளிக் கொண்டு இருந்த உபதேசங்களை நடுவில் நிறுத்திக் கேளாமல் பொருத்தருள வேணும் என்று கூறி விடை கொடுத்தார். மறுநாள் கூரகுலோத்தம தாஸர் அரண்மனைத் திருமாளிகைக்குச் செல்லவில்லை. அதற்கு மறுநாளும் கூரகுலோத்தம தாஸர்

எழுந்தருளவில்லை. உடனே தம்முடைய ஏவலாளிகளை அனுப்பினார். அதற்கு அவர் வாய்திறந்து மறுமொழி கூறவில்லை. ஏவலாளிகள் நடந்ததைக் கூறினார்கள். அதன் மறுநாளும் அவர் எழுந்தருளாத படியால் திருமலையாழ்வார் தம்முடைய ஆர்த்தியெல்லாம் தோன்றும் படியாக கால் நடையாகவே அவருடைய திருமாளிகைக்கு எழுந்தருளினார். அவர் நெடு நேரம் கழித்து ஸேவை சாதித்தார். அவரைக் கண்டதும் திருமலையாழ்வார் அவருடைய திருவடிகளிலே தண்டன் சமர்ப்பித்து மிகவும் கிலேசிக்க, அவர் உகந்தருளி உம்மைப் பொருத்தோம் என்று சொல்லி திருமாளிகைக்குள் அழைத்துச் சென்றார். அப்போது காலசேஷப ஸமயமாக இருந்ததால் அந்த கோஷ்டியில் சேர்ந்து அன்வயித்து அர்த்த விசேஷங்களைக் கேட்டு கோஷ்டி முடிந்த பிறகு ஆசாரியருடைய ஸ்ரீபாத தீர்த்தம் பெற்றுக் கொண்டார்.

## திருமலையாழ்வார் `கூரகுலோத்தம தாஸ நாயன்' என்று திருநாமம் சாற்றி அழைத்தல்

கூரகுலோத்தம தாஸர் அமுது செய்யும்படி நியமிக்க, திருமலையாழ்வார் ப்ரஸாதப்பட்டார். பவித்ரமான பிரசாதங்களை அமுது செய்த மறுகணமே திருமலையாழ்வார் பரமவிரக்தராய் வேறொன்றும் நான் அறியேன் என்று மதுரகவியாழ்வார் இருந்ததுபோல இவரும் கூரகுலோத்தமதாஸ நாயன் திருவடிகளே சரணம் என்று பலகாலும் அநுஸந்தித்துக் கொண்டு ராஜகார்ய நிர்வாஹ சமயத்திலேயும் ஒருவரின் பெயரைச் சொல்லி அழைக்கும் போதும் அவ்வாறே சொல்லத் தொடங்கினார். காரியஸ்தர்கள் அவருக்கு மனநிலை மாறி விட்டது என்று ராஜ பத்நிக்கு அறிவித்தனர். அவளும் இவரை அழைத்து சில வார்த்தைகள் சொல்ல, இவர் அதற்கு ஏற்ற பதில் கூறாமல் கூரகுலோத்தமதாஸ நாயன் திருவடிகளே சரணம், ஸகல கார்யமும் பத்ரம் என்று எப்போதும் சொன்னார். இதைக்கேட்ட ராஜபத்நி நாங்கள் ஸ்த்ரீ பாலர்களாயும் இருக்கிறபடியால், பிள்ளை ராஜகாரியம் நிர்வஹிக்கும் பக்குவம் வரும்வரை எல்லாக் காரியங்களையும் தேவரீரே பார்த்துக் கொள்வீர் என்றிருந்தோம் அப்படியின்றி இப்படியாயிற்றே என்று சோகித்தாள். உடனே அதற்கு இவர் அவளைத் தேற்றி உன்பிள்ளை இப்போது ஸமர்த்தன் ஆகிவிட்டான். எனக்கு கூரகுலோத்தம தாஸர் திருவடிகளையே எப்போதும் பற்றியிருக்க வேணும். நீங்கள் தடுக்கவேண்டாம். ஆனாலும் ராஜகார்யத்தை அடிக்கடி விசாரித்துக் கொண்டும் ராஜ குமாரனுக்கு அவ்வப்போது புத்தி சொல்லிக் கொண்டிருப்பேன் என்று ஸமாதனப்படுத்தினார். சில தினங்கள் கழித்து ராஜ்ய பாரங்களை அறவே துறந்தார்.

## கூரகுலோத்தம தாஸ நாயனார் சிக்கிலி கிராமத்திற்குச் சென்று தங்குதல்

கூரகுலோத்தம தாஸ நாயனார் மதுரையிலிருந்து திருப்புல்லாணிக்கு எழுந்தருளி அங்கு ஆதிஜெகந்நாதப் பெருமாளை மங்களாசாஸனம் செய்து

கொண்டு அருகிலிருந்த சிக்கிலி என்ற ச்ரோத்ரிய கிராமத்திற்கு சென்று தங்கினார். இதைக் கேள்வியுற்ற திருமலையாழ்வார் உடனே புறப்பட்டு சிக்கிலி அடைந்து குருகுல வாஸமாகத் தங்கினார். அங்குதான் பிள்ளைலோகாசார்யர் அருளிய ஸம்பிரதாய கிரந்தங்களை எல்லாம் உபதேசிக்கப் பெற்றார்.

## கூரகுலோத்தம தாஸ நாயனாரின் அந்திம கால ஆணைகள்

கூரகுலோத்தம தாஸ நாயனார் தமது அந்திம காலத்தை உணர்ந்தார். திருமலையாழ்வாரை அருகில் அழைத்து கீழ்கண்ட காரியங்களை நிறைவேற்றச் சொன்னார்.

1)நீர் விளாஞ்சோலைப் பிள்ளையிடத்தில் உமக்குச் சேரவேண்டிய அரும் பொருளைப் பிள்ளைலோகாசார்யர் சேர்த்து வைத்திருக்கிறார். அவரைச் சென்றடைந்து அர்த்த விசேஷங்களை அறிந்து வாரும்.

2)திருக்கண்ணங்குடிப் பிள்ளையிடத்திலும், திருப்புட்குழி ஜீயர் இடத்திலும் உமக்காகத் திருவாய்மொழியின் வ்யாக்யானம் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்களையும் கண்டு வணங்கி கேட்டுவாரும்.

3)மற்றுமுள்ள அருளிச்செயல் மூவாயிரத்தின் வ்யாக்யானங்களையும் நாலூர்ப் பிள்ளையிடம் கேட்டு வாரும் என்று கூறினார்.

## கூரகுலோத்தம தாஸ நாயனார் ஆசார்யன் திருவடியடைதல்

திருமலையாழ்வாருக்கு மேலே குறிப்பிட்ட அறிவுரைகள் சொன்ன பிறகு, திருக்கரங்களைக் கூப்பிய வண்ணம் பிள்ளைலோகாசாரியரின் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார். அவருடைய திருக்குமாரைக் கொண்டு சரம கைங்கரியங்களை நிறைவேற்றி தீர்த்த திருவத்யயனமும் சிறப்பாக நடத்தி வைத்தார் திருமலையாழ்வார்.

## கூரகுலோத்தம தாஸ நாயனார் செய்த நற்பணிகள்

1.இவர் பிள்ளைலோகசாரியர் ஸாதித்த காலக்ஷேப கோஷ்டியில் அன்வயித்து பல ரகசிய அர்த்தங்களை கேட்டறிந்தார். அதை மற்றையோருக்கும் உபதேசித்தார்.

2.முகம்மதியர்கள் ஸ்ரீரங்கத்தின் மீது படை எடுத்த போது இவர் பிள்ளைலோகாசாரியருக்கு உசாத் துணையாகயிருந்து மற்றைய சிஷ்யர்களுடன் சேர்ந்து நம்பெருமாளுக்குத் தீங்கு நேராதபடி மங்களாசாஸனம் செய்த வண்ணம் ஸ்ரீரங்கத்தை விட்டு அகன்று பல நாட்கள்

கடும்பயணம் மேர்க்கொண்டு மதுரையின் அருகிலுள்ள ஜ்யோதிஷ்குடி என்ற கிராமத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணுவதற்கு உதவி புறிந்தார்.

3.பிள்ளை லோகாசாரியரின் விருப்பப்படி திருவாய்மொழிப்பிள்ளையை திருத்திப் பணி கொண்டு தத்வத்ரயாதி பஞ்சரஹஸ்யங்களும், ஆசார்யஹ்ருதயமும், ரஹஸ்ய வ்யாக்யானங்களும் ஸாதித்தருளினார். (மணக்கால் நம்பி ஆளவந்தாரைத் திருத்திப் பணிகொண்டது போல).

<u>பிள்ளைலோகாசார்யர், கூரகுலோத்தம தாஸர், திருமலையாழ்வார் விஷயமாக மாமுனிகள் அருளியுள்ள ஸ்லோகம் / பாசுரங்கள்</u>

லோககுரும் குருபிஸ்ஸஹ பூர்வை: கூரகுலோத்தமதாஸமுதாரம் /
ஶ்ரீநகபத்யபிராமவரேஸௌ தீப்ரஸயாநகுருஞ்ச பஜேஹம் //

கோதிலுல காசிரியன் கூரகுலோத்தமதாதர்
தீதில் திருமலையாழ்வார் செழுங்குரவை மணவாளர்
ஓதுபுகழ்த் திருநாவீறுடையபிரான் தாதருடன்
போத மணவாளமுனி பொன்னடிகள் போற்றுவனே.

வாழி உலகாசிரியன் வாழியவன் மன்னுகுலம்
வாழி முடும்பை யென்னு மாநகரம் - வாழி
மனம்சூழ்ந்த பேரின்ப மல்குமிகு நல்லார்
இனம் சூழ்ந்திருக்கும் இருப்பு.

ஓது முடும்பை யுலகா சிரியனருள்
ஏது மறவாத வெம்பெருமான் - நீதி
வழுவாச் சிறுநல்லூர் மாமறையோன் பாதந்
தொழுவார்க்கு வாரா துயர்.

மேலே சொன்ன விஷயங்கள் அடியேனுடைய ஆத்ம நண்பர் மதுரை பேராசிரியர் முனைவர் ஶ்ரீ.உ.வே இரா.அரங்கராஜன் ஸ்வாமி அருளியுள்ள மன்னுபுகழ் மணவாளமாமுனிவன் என்கிற நூலில் இருந்தும், பெரியதிருமுடி யடைவு மற்றும் யதீந்த்ரப்ரவணப்ரபாவம் என்கிற நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டது.

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே சரணம்
கூரகுலோத்தம தாஸ நாயனார் திருவடிகளே சரணம்
திருவாய்மொழிப் பிள்ளை திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: க்ஷந்தவ்ய: